அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நேற்று (28.04.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல் மற்றும் சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை உயர்த்துதல் ஆகியவை குறித்து கூட்டுறவு/பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வி. தட்சிணாமூர்த்தி, பி. பாலமுருகன், திருமதி டி. ரமணிதேவி, வி. மாலதி மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத்துறை — சர்க்கரைத்துறை

அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை,ஏப்.29-

சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் தமிழ் நாட்டில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல் மற்றும் சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை உயர்த்துவது குறித்து 28.04.2025 அன்று தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை வேளாண்மை, உழவர்நலத் துறையின் கூட்ட அரங்கில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வி. தட்சிணாமூர்த்தி இ.ஆ.ப. கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் / சர்க்கரைத்துறை கூடுதல் இயக்குநர் பி. பாலமுருகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் திருமதி. டி. ரமணிதேவி, மாவட்ட வருவாய் அலுவலர், பொது மேலாளர் தமிழ்நாடு சர்க்கரைக்கழகம் திருமதி வி. மாலதி கூட்டுறவு / பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் கரும்பு சாகுபடியை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனும் அதிகரித்து வருகிறது. கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்காக அரசு தொடர்ந்து பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக 2024-25 அரவை பருவத்திற்கு சிறப்பு ஊக்கத் தொகையாக முன் எப்போது இல்லாத வகையில் டன் ஒன்றுக்கு ரூபாய் 349/- அறிவித்ததன் மூலம் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூபாய்.3500/-என உயர்த்தப்பட்டுள்ளதன் மூலம் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் விவசாயிகள் பயன் பெறுவார்கள். இதற்கென 2025-26 நிதியாண்டில் ரூபாய் 297 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறை மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் அவர்கள் 2025-26 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள அதிக பட்ச சிறப்பு ஊக்கத் தொகை குறித்து அனைத்து கரும்பு விசாயிகளுக்கும் கொண்டு சென்று விவசாயிகளை நேரில் சந்தித்து, கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கரும்பு விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் பெற்றிடவும், கரும்பு அறுவடைக் கூலியை குறைத்திட அகலப்பார் முறையில் அதிக பரப்பளவில் கரும்பு சாகுபடி மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்கள். மேலும், அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுக்குரிய முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி உரிய ஆணைகளை விரைந்து பெற்று செயல்படுத்திட அறிவுறுத்தினார்கள். மேலும், அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் சர்க்கரைத்துறை அலுவலர்கள் மகாராஷ்டிரா மாநிலம் பாராமதி பகுதிக்கு சென்று செயற்கை நுண்ணறிவு மூலம் கரும்பு மகசூலை அதிகரிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள சோதனை வயல் திட்டத்தை ஆய்வு செய்து வந்ததை தொடர்ந்து, திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து செயல்படுத்திட நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் கரும்பு இனப் பெருக்க நிறுவனம், கோயம்புத்தூர் ஆகியவற்றுடன் இணைந்து அதிக பிழிதிறன் உள்ள புதிய கரும்பு இரகங்களை அதிக பரப்பளவில் சாகுபடி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அரசு சார்பில் வழங்கும் பல்வேறு மானியங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு உரிய அறிவுரைகள் வழங்கினார்கள். மேலும் ஆலை செயல்பாடுகளை மேம்படுத்தவும் உரிய அறிவுரைகளை வழங்கினார்கள்.

சென்னை கிழக்கு மாவட்டம்,எழும்பூர் வடக்கு பகுதி, 78 வது வட்டக் கழகம் சார்பில் மக்களின் தாகம் தீர்க்கும் கோடைகால நீர் மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி தானா தெரு புரசைவாக்கத்தில் வட்டச் செயலாளர் சு.மனோகர் தலைமையில் நடைபெற்றது. பகுதி செயலாளர் சொ.வேலு முன்னிலை வகித்தார். கோடைகால நீர் மோர் பந்தலை மாவட்ட கழக செயலாளர்,அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

நீலகிரி வரையாடு திட்டம்

தமிழ்நாட்டில் இரண்டாம் ஒருங்கிணைந்த நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு நிறைவு !

சென்னை.ஏப்.29-

மாநில விலங்கான நீலகிரி வரையாட்டை பாதுகாக்க நீலகிரி வரையாடு திட்டம் தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இரண்டாவது ஒருங்கிணைந்த நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு 27.04.2025 அன்று நிறைவுபெற்றது. தமிழ்நாட்டில் உள்ள 14 வனப் பிரிவுகளின் 176 கணக்கெடுப்புத் தொகுதிகளில் இது நடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் சுமார். 800 களப்பணியாளர்கள் வடக்கு முதல் தெற்கு மற்றும் கிழக்கு முதல் மேற்கு வரை சுமார் 2000 கி.மீ. தூரத்திற்கு தோராயமாக 230 சதுர கி.மீ. பரப்பளவில் நடைபயணம் மேற்கொண்டு மேற்படி கணக்கெடுப்பை நடத்தினர். கணக்கெடுப்பு சமயத்தில் நீலகிரி வரையாடுகள் அதிகாலை 6 மணி முதல் காலை 10 மணி வரை பெரும்பாலான கணக்கெடுப்புத் தொகுதிகளில் களப்பணியாளர்கள் பார்வையில் தென்பட்டன. மேலும், பல இடங்களில், மந்தைகள் இளங்குட்டிகள் மற்றும் குட்டிகளுடன் காணப்பட்டன. இந்த ஆண்டு பெண் மற்றும் குட்டிகள் விகிதம் நன்றாக இருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது. களப்பணியாளர்கள் நீலகிரி வரையாட்டின் புழுக்கைகள் மற்றும் மாமிச உண்ணிகளின் எச்சங்கள் ஒட்டுண்ணி பகுப்பாய்விற்கு சேகரித்துள்ளனர் இது ஒட்டுண்ணிகளின் வாழ்க்கை சுழற்சியையும். நீலகிரி வரையாடுகளுடன் அவற்றிற்கு உள்ள தொடர்பையும் கண்டறிய உதவும் கோயம்புத்தூர் கோட்டத்தில் உள்ள பெரியாட்டுமலை பகுதியில் பத்தாண்டுகளுக்கு பிறகு முந்தைய கணக்கெடுப்பில் நீலகிரி வரையாடு காணப்பட்ட அதே பகுதியில் மீண்டும் அதே வரையாட்டு கூட்டம் பார்வையில் தென்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேகமலை கோட்டம் சின்னமனூர் வனச்சரகத்திலுள்ள நீலகிரி வரையாட்டின் புதிய வாழ்விட பகுதியான பசுமலை தொகுதியில், இந்த கணக்கெடுப்பில் நீலகிரி வரையாடு மீண்டும் பார்வையில் தென்பட்டது. இது ஆரோக்கியமான வாழ்விட மீட்சியின் அறிகுறியாகும். மேலும் நீலகிரி வரையாடுகள் இந்த வாழ்விடத்தைப் பயன்படுத்துவதற்கு எந்த மானுடவியல் அழுத்தமும் இல்லை என்று தெரிய வருகிறது.

குறைந்த உயரத்திலுள்ள வரையாட்டு வாழ்விடமான பேயனார் வரையாட்டு மொட்டைப் பகுதியில் (240 மீ கடல் மட்ட உயரம்) 7 வரையாடுகள் களப்பணியாளர்களின் பார்வையில் தென்பட்டன. இப்பகுதியானது மிகச்சிறந்த பாறை மற்றும் தப்பிக்கும் நிலப்பரப்பினை கொண்ட தொகுதிகளில் ஒன்றாகும். இங்கு நீலகிரி வரையாடுகள் வறண்ட புல்கள் நிறைந்த வனப்பரப்பை பயன்படுத்துகின்றன. மேகமலை கோட்டத்தில் உள்ள மாங்களாதேவி பகுதியில் வரையாட்டின் புழுக்கைகள் கண்டறிப்பட்டுள்ளது. இது நீலகிரி வரையாடு மீண்டும் இப்பகுதியை பயன்படுத்தி பின் இப்பகுதியை விட்டு வெளியேறி இருக்கக்கூடும் என அனுமானிக்கப்படுகிறது. கேரள மாநிலத்தில் உள்ள மூன்று தொகுதிகளிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

சேகரிக்கப்பட்ட புழுக்கைகள் மற்றும் மாமிச உண்ணிகளின் எச்ச மாதிரிகள் எத்தனால் குப்பிகளில் சேகரம் செய்யப்பட்ட தகவல்கள் குறிக்கப்பட்டது. இது ஆய்வக பகுப்பாய்விற்கும். குறிப்பாக ஒட்டுண்ணி பகுப்பாய்விற்கும், TANUVAS இல் உள்ள வனவிலங்குப் பிரிவில் அனுப்பத் தயாராக உள்ளது.

கிராஸ் ஹில்ஸ் தேசிய பூங்கா மற்றும் முகூர்த்தி தேசிய பூங்காவில் நீலகிரி வரையாடுகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் காணப்பட்டன. இந்த இரு பெரு நீலகிரி வரையாடு கூட்டங்கள் சோலைப் புல்வெளிகளைப் பராமரிக்க இன்றியமையாதவையாகும். இதற்கு புகைப்பட ஆவணங்கள் சான்றாகும். தரவுத் தாள் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. தரவுத் தாள்கள் திட்ட இயக்குநர் அலுவலகத்திற்கு கிடைத்த பிறகு தரவுகள் கணினி மயமாக்கப்பட்டு தரவு செயலாக்கம் மற்றும் தரவு விளக்கம் ஆராய்ச்சி பணியாளர்கள் மற்றும் நிபுணர்களுடன் மேற்கொள்ளப்படும்.

இந்த இரண்டாவது ஒருங்கிணைந்த நீலகிரி வரையாடு கணக்கெடுப்பு திட்ட இயக்குநர் திரு மா. கோ.கணேசன் தலைமையில் கே.கணேஷ்ராம். உதவி இயக்குநர் செள. செந்தூரசுந்தரேசன். வனச்சரக அலுவலர் பொ. வைரவராஜா. வனவர். முனைவர் அசோக்குமார். திட்ட விஞ்ஞானி. முதுநிலை ஆராய்ச்சியாளர்களான முனைவர் சுப்பையன். மணிகண்டன் நேசன். ராகவேந்திரன் ஆகியோர் துணையுடன் செயல்படுத்தப்பட்டது. தமிழ்நாடு கால்நடை பல்கலைகழக நிபுணர் டாக்டர். வளர்மதி WWF-INDIA நிறுவனத்தின் பிரெடிட் மற்றும் வினோத் அவர்கள் இக்கணக்கெடுப்பிற்கு உதவினர் 14 நீலகிரி வரையாடு வாழ்விட வனக் கோட்டங்களின் மாவட்ட வன அலுவலர்கள் துணை இயக்குநர்கள் வன உயிரினக் காப்பாளர்கள் அனைத்துவித உதவிகளையும் செய்தனர்.

IUCN இந்திய நாட்டு பிரதிநிதி டாக்டர். யாஷ் வீர் பட்நாகர் மற்றும் அரசு கூடுதல் தலைமை செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு. அவர்கள் இந்த முழு கணக்கெடுப்பின் செயல்பாடுகளை கண்காணித்ததுடன் களப்பணியாளர்களை கோயம்புத்தூரில் சந்தித்து கணக்கெடுப்பினை துவக்கி வைத்தனர். முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனஉயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா இ.வ.ப., மற்றும் மற்ற மூத்த வனத்துறை அதிகாரிகளும் இந்த கணக்கெடுப்பை கண்காணித்தனர்.

விஜய் வெங்கடேசன் ஏற்பாட்டில் - சென்னை தென் மேற்கு மாவட்ட

இலக்கிய அணி சார்பில் பாரதிதாசன் பிறந்தநாள் விழா!

மயிலை த வேலு எம்.எல்.ஏ. – நந்தனம் கி மதி, – எஸ் முரளி – மு ராஜேந்திரன் பங்கேற்பு!

சென்னை, ஏப். 29-

சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் புரட்சி கவி பாரதிதாசன் அவர்களின் 135 வது பிறந்த நாளை முன்னிட்டு 29.04.2025 செவ்வாய்கிழமை காலை 9 மணி அளவில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் ஏற்பாட்டில் மயிலாப்பூர் சி.பி. ராமசாமி சாலை அலுவலகத்தில் பாரதிதாசன் பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினரும் , சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த வேலு கலந்து கொண்டு புரட்சி கவி பாரதிதாசன் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார். பின்னர் கழக நிர்வாகிகளுக்கு பாரதிதாசன் கவிதை புத்தகம் வழங்குகின்றார் .

இந்த நிகழ்ச்சியில் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி , 123 அ வட்ட செயலாளர் மு.ராஜேந்திரன், இலக்கிய அணி மாவட்ட தலைவர் ச.தேவராசு , மாவட்ட துணை தலைவர் கே.பால கிருஷ்ணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் அயன் ரா.ரமேஷ் , சதாசிவம், செந்தில் குமார், வரதராஜன், எம்.ஜி. சேகரன்,

மயிலை கிழக்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் சு.மோகன் ,கிழக்கு பகுதி தலைவர் எம். டெல்லி, மயிலை மேற்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் க.கணபதி , மேற்கு பகுதி தலைவர் பி.எஸ்.ஆறுமுகம் ,

தியாகராயர் நகர் மேற்கு பகுதி அமைப்பாளர் யு.ராம் பாபு, தியாகராயர் நகர் கிழக்கு பகுதி அமைப்பாளர் மாதவன் பகுதி இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கின்றனர்.

மேயர் க. வசந்தகுமாரி தலைமையில்- தாம்பரம் மாநகராட்சி கூட்டம்

பல்லாவரம் தொகுதியில் பூங்காவிற்கு முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்!

மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தீர்மானத்தில் கோரிக்கை!

பல்லாவரம் ஏப்29

தாம்பரம் மாநகராட்சியின் கூட்டம் மேயர் க. வசந்தகுமாரி தலைமையிலும் துணை மேயர் கோ. காமராஜ் முன்னிலையிலும் நேற்று காலை 10 மணி அளவில் தாம்பரம் மாநகராட்சி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாநகராட்சி வளர்ச்சி பணிகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மண்டல தலைவர்கள் தனது மண்டலத்தின் வளர்ச்சி பணிகள் குறித்தும் மாமன்ற உறுப்பினர்கள் வார்டுகளின் வளர்ச்சி பணிகள் குறித்தும் உரையாற்றினார்கள்

அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்வதாக மேயர் வசந்தகுமாரி உறுதி அளித்தார்.

அப்பொழுது இரண்டாவது மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் பகுதியில் பல்வேறு பூங்காக்கள் மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன பூங்காக்கள் அனைத்தும் தற்போது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

அதுபோல் 17வது வார்டில் சுபம் நகரில் உள்ள பூங்காக்களுக்கு பேஸ் 1 பூங்கா பேஸ்2 பேஸ்3 பூங்கா என என பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் பொதுமக்கள் பெரிதும் குழப்பம் அடைகின்றனர்.

எனவே இந்த பூங்கா க்களுக்கு இந்த நாட்டுக்காகவும் நாட்டு மக்களின் நலனுக்காகவும் இரவு பகல் பாராமல் உழைத்து என்றும் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கும் தலைவர்களின் பெயர்களை பூங்காக்களுக்கு சூட்ட தீர்மானம் கொண்டு வந்தார் அதன்படி பேஸ் 1 பூங்காவிற்கு தந்தை பெரியார் பூங்கா எனவும் பேஸ் 2 பூங்காவிற்கு பேரறிஞர் அண்ணா பூங்கா எனவும் பேஸ்3 பூங்காவிற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் பூங்கா எனவும் பெயர் சூட்ட வேண்டும் என தனித் தீர்மானத்தை கொண்டு வந்து ஒரு மனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டு கேட்டுக் கொண்டார் அதன் அடிப்படையில் மேயர் அவர்கள் தீர்மானத்தை மன்றத்தில் வைத்ததை தொடர்ந்து மன்றத்தில் ஒரு மனதாக நிறை வேற்றப்பட்டது அதற்காக மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மேயர் துணை மேயர் மாமன்ற உறுப்பினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

சீ.வி.திவான் குமார் தலைமையில் - மயிலை மேற்கு பகுதி இளைஞரணி சார்பில்

123 'அ' வட்டத்தில் தண்ணீர் பந்தல் திறப்பு!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப்ரல்.29

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சீ.வி.திவான் குமார் தலைமையில் மோர், பழரசம். பழங்கள் வழங்கும் விழா இன்று (29.04.2025 செவ்வாய்கிழமை) காலை 11 மணியளவில் செயின்ட் மேரிஸ் பாலம் வாரன் ரோடு அருகில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதிஎம்.சி. ,எஸ். முரளி மற்றும் ராஜா அன்பழகன் எம்.சி. மூ.இராஜேந்திரன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் . மாவட்ட இளைஞர் அணிதுணை அமைப்பாளர்கள் தினேஷ் மாணிக்கம், த. விக்னேஸ்வரன் எஸ்.உமா சங்கர், சி.பிரகாஷ், எ.அஸ்வின் குமார், மற்றும் கிழக்கு பகுதி அமைப்பாளர் டி. ஜெகதீஷ் பாபு ஆகியோர் வர வேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.. தூத்துக்குடி எஸ். ஜோயல், ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொது மக்களுக்கு மோர், பழங்கள் வழங்கின்றனர்.

மயிலை மேற்கு கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நீ ஜெயக்குமார் ந.உதயன் ர.இளையக்குமார் எ சூர்யா ஜெ ராஜேஷ்குமார் ஆர்.அரவிந்த் ரமேஷ், கு.லோகேஷ், தா.தீபன், வேஹேமந்த்குமார், பா.முருகேசன் ஏ குட்டி, மு.நிரஞ்சன்சாய், சுந்தர் ரகு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இதில் வட்ட செயலாளர்கள் ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி,

எஸ். ஆர். ராஜாசுரேஷ் குமா அ.நாகராஜன் மு.இ.ஏழுமலை ஏ.தாஸ், மா.பா.அன்பு. அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ. கண்ணன் துரைப்பார்த்திபன், பா.பொன்னுசாமி, மற்றும் மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள்: அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

கு.லோகேஷ் தலைமையில்

122வது வட்டத்தில் தண்ணீர் பந்தல்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு திறந்து வைக்கிறார்!

சென்னை, ஏப்ரல்.29

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா மயிலை மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் கு.லோகேஷ் தலைமையில் மோர், பழரசம். பழங்கள் வழங்கும் விழா இன்று (29.04.2025 செவ்வாய்கிழமை) பிற்பகல் 12 மணியளவில் ஜோதி தோட்டம் நந்தனம் சிக்னல் அருகில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி. எஸ். முரளி மற்றும் ராஜா அன்பழகன் எம்.சி. எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார் , ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் .

மாவட்ட இளைஞர் அணிதுணை அமைப்பாளர்கள் தினேஷ்மாணிக்கம், த. விக்னேஸ்வரன் எஸ்.உமா சங்கர், சி.பிரகாஷ், எ.அஸ்வின் குமார், மற்றும் பகுதி அமைப்பாளர்கள் சீ.வி. திவான் குமார், டி.ஜெகதீஷ் பாபு ஆகியோர் வர வேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.. தூத்துக்குடி எஸ். ஜோயல், ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொது மக்களுக்கு மோர், பழங்கள் வழங்கின்றனர்.

இதில் வட்ட செயலாளர்கள் ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, அ.நாகராஜன், மூ.இ.ஏழுமலை மூ.இராஜேந்திரன், ஏ.தாஸ், மா.பா.அன்பு. அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ. கண்ணன் துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி, மற்றும் மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

மயிலை மேற்கு கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நீ.ஜெயக்குமார், ந. உதயன், ர.இளையக்குமார், எ சூர்யா, ஜெ ராஜேஷ்குமார், அஅரவிந்த் ரமேஷ், தா.தீபன், வேஹேமந்த்குமார், பா.முருகேசன், ஏ.குட்டி மு.நிரஞ்சன்சாய், சுந்தர் ரகு, ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 34 வது வட்ட கழக செயல்வீரர் கைப் ஆர். சுரேஷ் அவர்களின் ஏற்பாட்டில் மாவட்ட பிரதிநிதி என்.நந்தகோபால் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியை மாவட்ட பொறுப்பாளரும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான திரு ஆர்.டி.சேகர் அவர்கள் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட துணைசெயலாளர் எஸ்.ஆர்.கமலக்கண்ணன் பகுதி செயலாளர் அ.முருகன் வட்ட செயலாளர்கள் கே.வி ராஜன் , இரா.ஹரிதாஸ் , என்.கார்த்திபன், கே.இ.செந்தமிழ்அரசு , சி.எஸ்.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் ராஜா கடை சாத்தாங்காடு ஐ ரோடு சென்ட்பால்ஸ் பள்ளியில் சென்னை வடகிழக்கு மாவட்ட திருவொற்றியூர் மேற்கு பகுதி டாக்டர் எஸ்.அப்பு என்கின்ற சிவராமன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் சட்டமற்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் ஆணழகன் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் கழக நிர்வாகிகள் மற்றும் பலர் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42(அ) வட்டம் சார்பில் வட்ட செயலாளர் ச.தமிழ்செல்வன் தலைமையில் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாரயணன் ஆகியோர் முன்னிலையில் கழக மாணவரணி உறுப்பினர் சேர்த்தல் பணி நடைபெற்றது. நிகழ்வில் இர.பொன்இளவரசன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, ப.ஆ.சண்முகம், மா.ரூபசங்கர், பி.கே.மூர்த்தி, எஸ். ஜெ.ராமு, எஸ்.அரிஸ்குமார், கே.தேவதாஸ், கே.மணி, ஜி.எம்.பிரபு, எச்.வசந்தகுமாரி, கே.சங்கர், த.குமரேசன், ச.குமரன், வி.எஸ்.டி.பாலாஜி, வீ.செல்வமணி, தே.ஜனார்த்தனன், ஜெ.வசந்தகுமார், சீ.கார்த்திக், வி.அருள், ஜெ.மகேஸ்வரி, எம்.கலைவாணி, எஸ்.வி.சிவா, பி.நாகு, பா.டேனியல், பாக முகவர்கள் மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.